ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் என இரு பேருந்து நிலையங்கள் உள்ளன. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையத்தில் 85 கடைகள் இருக்கின்றன. அவற்றின்மூலம் ஆண்டுக்கு 64,05,852 ரூபாய் வருவாயும், ஆண்டு உரிமை ஆணை இனங்களின்மூலம் 1 கோடியே 72 இலட்சத்து 90 ஆயிரத்து 50 ரூபாய் வருவாயும் ஈட்டப்பட்டு வருகின்றது. இந்தப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. அவ்விடத்தில் மேலும், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி தற்போது கட்டப்பட்டு வருகின்றது. இதைத் தவிர, இந்தப் பேருந்து நிலையத்தின் அருகில், சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமாக காலியிடம் எதுவும் இல்லை என்பதால், இப்பகுதியில் வணிக வளாகம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

234—

கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

***47712—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளையிலுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளையில் பழுதடைந்த கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்வி இந்த அவைக்கு வருவதற்கு முன்பே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, திசையன்விளையிலுள்ள பழுதடைந்த கால்நடை மருத்துவமனைக் கட்டடத்துக்கு, 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால், 15-7-2015 அன்று திறக்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கோரிக்கை வைத்த இடத்தில், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாங்கம், திசையன்விளை, பணகுடி, வடக்கன்குளம் மற்றும் செட்டிக்குளம் ஆகிய நான்கு ஊராட்சிகளுக்கும் தலா ரூ.22 இலட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்துள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ராதாபுரம் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.*

அதேபோல், கால்நடை அலகு அடிப்படையில் தகுதி பெறுவதால் ராதாபுரம் ஒன்றியம், நவலடியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தைத் துறையின் வாயிலாக ஆய்வு*

செய்து, துறையின் விதிகளுக்குட்பட்டு இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

235—

சாலையைச் சீரமைத்தல்

***47824—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையத்திலுள்ள அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையை சுற்றுலாத் துறையின் மூலமாகச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் நகரில் அமைந்துள்ள அருள்மிகு மாயூரநாதசுவாமி கோயிலுக்குச் செல்லும் சாலையைச் சீரமைப்பது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை செயற்பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ள அறிக்கையில், "இத்திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையைச் சீரமைக்கும்போது, தேரோடும் வீதியின் குறுக்கே சாலை அமையும் வகையில் போட வேண்டியுள்ளதால், சாலை அமைப்பது இயலாத காரியம்" என்று தெரிவித்துள்ளபடியால், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அச்சாலையைச் சீரமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.